**நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அரூர்.**

**முன்னிலை- திரு.J.K. திலிப், பி.ஏ.பி.எல்,**
**நீதித்துறை குற்றவியல் நடுவர், அரூர்.**

***2017ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் நாள் செவ்வாய்க்கிழமை***
***(ஹேவிளம்பி ஆண்டு கார்த்திகை மாதம் 12-ம் நாள் செவ்வாய்க்கிழமை)***
***ஆண்டு பட்டிகை வழக்கு எண்.01/2017***

அரசுக்காக-
காவல் ஆய்வாளர்,
அரூர் காவல் நிலையம்
காவல் நிலையக் குற்ற எண்.111/16 .... குற்றமுறையிடுபவர்

//எதிராக//

1. தீர்த்தகிரி(24),
த/பெ. சங்கர்(எ)சிவசங்கர்,

2. தமிழழகன்(23),
த/பெ. மகாலிங்கம்,

இருவரும் வசிப்பது
எஸ் .பட்டி கிராமம்,
கொங்கவேம்பு அஞ்சல்
அரூர் வட்டம்,
தருமபுரி மாவட்டம். .....எதிரிகள்

WEB COPY

இந்த வழக்கு 12.07.2016-ஆம் தேதி அன்று இந்நீதிமன்றக் கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசுக்காக இரண்டாம் நிலை குற்றவியல் வழக்கறிஞர் அவர்களும் எதிரிக்காக வழக்கறிஞர் திரு. A. வடிவேலன், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்து இறுதியாக இந்நீதிமன்றம் வழங்கும் ....

**தீர்ப்புரை**

கடந்த 09.02.2016-ந்தேதி மாலை சுமார் 14.00 மணிக்கு அரூர் காவல் நிலைய சரகம் எஸ்.பட்டி பஸ் நிறுத்தம் அருகே L.R.N பஸ்ஸில் அரூரிலிருந்து தனது சொந்த ஊரான கொங்கவேம்பு செல்ல பஸ்ஸில் வந்த புகார்தாரரை எதிரிகள் ஏ1.தீர்த்தகிரி, ஏ2.தமிழழகன் இருவரும் "உன்னால் தாண்டா தேவடியா பையா" இரண்டு ஊருக்கும் பிரச்சனை ஏற்பட்டது

என்று திட்டியது இ.த.ச பிரிவு 294(பி)-ன்படியும், அதேசம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரிகள் இருவரும் "கையால் புகார்தாரரின் முதுகின்மீது லேசாக அடித்தது" இ.த.ச பிரிவு 323-ன் படியும், அதேசம்பவத்தின் தொடர்ச்சியாக புகார்தாரரைப் பார்த்து "வெளியில் சொன்னால் உன்னைக் கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டியது" இ.த.ச பிரிவு 506(i)-ன்படியும் குற்றம் புரிந்துள்ளதாக அரூர் காவல் நிலையக் காவல் ஆய்வாளர் அவர்களால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து தொடரப்பட்டுள்ள வழக்காகும்.

2. குற்றப்பத்திரிக்கை பரிசீலனை செய்து கோப்பில் எடுக்கப்பட்டு வழக்கு எண் வழங்கப்பட்டது.

3. இவ்வழக்கில் எதிரிகளுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டு எதிரிகள் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு வழக்கின் நகல்கள் அனைத்தும் கு.மு.வி.ச.207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசம் கொடுத்தப்பிறகு இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 மற்றும் 506(1)-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அவை குறித்து வாசித்து விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தைப் பொய்வழக்கு என மறுத்துரைத்தார்கள்.

WEB COPY

4. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளாக 1 முதல் 3 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் மூலம் சான்றாவணங்கள் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. அ.சா.1 ராமதுரை தனது சாட்சியத்தில் தான் கொங்கவேம்பில் குடியுருப்பதாகவும், தான் ஏ.எம்.எஸ் கலை அறிவியல் கல்லூரியில் படித்து வருவதாகவும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்றும், அதில் என்ன விவரம் உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், மேற்படி அந்தக் கையொப்பம் அ.த.சா.ஆ.1 ஆக

குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.2 கிருஷ்ணன் தனது சாட்சியத்தில் தான் தற்போது கொங்கவேம்பில் குடியிருப்பதாகவும், வழக்கு சம்மந்தமாகத் தனக்கு எதுவும் தெரியாது என்றும், அ.சா.1 தனது மகன் என்றும், எதிரிகளைத் தெரியும் என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.3 அல்லிமுத்து தனது சாட்சியத்தில் தான் தற்போது அரூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வருவதாகவும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு.ஜெகநாதன் தனக்கு நன்கு தெரியும் என்றும், அவருடன் தான் பணியாற்றியதாகவும், அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் தனக்கு நன்கு பரிட்சயம் என்றும், தற்போது புலன் விசாரணை அதிகாரி வேறு பணி காரணமாக வெளியூரில் உள்ளார் என்றும், அவரால் வர இயலவில்லை என்றும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 10.02.2016-ம் தேதி மாலை 15.00 மணிக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சுப்பிரமணி அவர்களை நிலைய அலுவலில் இருந்தபோது கொங்கவேம்பு கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் ராமதுரை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் அரூர் காவல் நிலையக் குற்ற எண்.111/2016 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506 (1) இ.த.ச-வின்படி வழக்கு பதிவு செய்து காவல் உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளதாகவும், இவ்வழக்கினை காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜெகநாதன் புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு சம்பவ இடமான எஸ்.பட்டி பஸ் நிறுத்தம் சென்று அங்கு சாட்சிகள் அடையாளம் காட்ட சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சாட்சிகள் தசரதன் கோகுலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்தும், மகஜர் தயார் செய்தும் அதில் கையொப்பம் பெற்றும், பிறகு சாட்சிகள் ராமதுரை, கிருஷ்ணன், செல்லம்மாள், ராமலிங்கம் ஆகியோர்களை விசாரித்தும் வாக்குமூலங்களைப் பதிவு செய்தும், பிறகு எதிரிகள் தீர்த்தகிரி, தமிழழகன்

WEB COPY

ஆகியோர்களை 26.05.16-ம் தேதி அரூர் கிளை சிறைச்சாலையில் உத்தரவுபடி காவல் படுத்தியும், 30.06.16-ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வளார் சுப்பிரமணி அவர்களை விசாரித்தும், எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(1) இ.த.ச-வின்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், புகார் அ.த.சா.ஆ.2, முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3, பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5, ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

8. மேற்கண்ட சாட்சிகள் விசாரணைக்குப் பிறகு எதிரிகள் மீது பாதகமாக உள்ள சாட்சியம் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313 (1)(ஆ)ன் கீழ் வினவியபோது அரசு தரப்பின் சாட்சியங்களை மறுத்துரைத்து மேற்கண்ட சாட்சியங்கள் பொய் சாட்சியங்கள் என்றும் வழக்கு பொய்வழக்கு என்றும் மறுத்துரைத்தார்கள். எதிரிகளின் தரப்பில் சாட்சிகள் சான்றாவணங்கள் முன்னிலைபடுத்தப்படவில்லை.

WEB COPY

9. <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை</u>..

எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 மற்றும் 506(1)-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பினரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

10. அரசு தரப்பு வழக்கு யாதெனில். கடந்த 09.02.2016-ந்தேதி மாலை சுமார் 14.00 மணிக்கு அரூர் காவல் நிலைய சரகம் எஸ்.பட்டி பஸ் நிறுத்தம் அருகே L.R.N பஸ்ஸில் அரூரிலிருந்து தனது சொந்த ஊரான கொங்கவேம்பு செல்ல பஸ்ஸில் வந்த புகார்தாரரை எதிரிகள் ஏ1.தீர்த்தகிரி, ஏ2. தமிழழகன் இருவரும் "உன்னால் தாண்டா தேவடியா பையா" இரண்டு ஊருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்று திட்டியது இ.த.ச பிரிவு 294(பி)-ன்படியும், அதேசம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரிகள் இருவரும் "கையால் புகார்தாரரின் முதுகின்மீது லேசாக அடித்தது" இ.த.ச பிரிவு 323-ன் படியும்,

அதேசம்பவத்தின் தொடர்ச்சியாக புகார்தாரரைப் பார்த்து "வெளியில் சொன்னால் உன்னைக் கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டியது" இ.த.ச பிரிவு 506(i)-ன்படியும் தண்டிக்கப்பட வேண்டிய குற்றத்தைப் புரிந்துள்ளதாக வழக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

*11.* இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அ.சா.*1* வழக்கின் புகார்தாரர் ஆவார். வழக்குச்சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் அவர் கொடுத்த புகாரில் உள்ள கையெழுத்து அ.த.சா.ஆ.*1* என்றும், சம்பவத்தின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.*1* மற்றும் அ.சா.*2* அரசுத்தரப்பு வழக்கை ஒன்றி சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள். அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித பதில்களும் இல்லை. அ.சா.*1* மற்றும் அ.சா.*2* ஆகியோர் எதிரிகளை அடையாளம் காட்டியோ அல்லது எதிரிகளின் குற்றச் செய்கை குறித்தோ எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.*1*, மற்றும் அ.சா.*2* ஆகியோர் வழக்கு சம்மந்தமாகத் தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரணை செய்யவில்லை என்றும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்தும், எதிரிக்கு எதிராக எவ்வித சான்றும் அளிக்கவில்லை. அ.சா.*3*-ன் சாட்சியத்தைக்கொண்டு சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது என்றும், வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று விசாரணை செய்துள்ளார் என்று மட்டுமே உறுதிசெய்ய இயலும். எதிரிகள் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதற்குத் தெளிவான சாட்சியம் எதுவும் இல்லை. எனவே, சந்தேகத்தின் அணுகூலம் எதிரிகளுக்கே உரியது. மேற்சொன்ன விவாதங்களின்படி அரசுத்தரப்பு எதிரிகளுக்கெதிரான குற்றச்சாட்டுக்களைச் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் *294(பி)*, *323* மற்றும் *506(1)*-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பு சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை என்று கருதி

WEB COPY

இக்குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரிகளைக் குற்றவாளிகள் அல்லர் என்று முடிவு செய்து கு.வி.மு.ச. பிரிவு **255(1)**ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இல்லை.

இந்தத் தீர்ப்புரை முழுவதும் இன்று 28.11.2017-ம் தேதி என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக உரைக்கப்பட்டு, அவரால் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

நீதித்துறை குற்றவியல் நடுவர்,
அரூர்.

இணைப்பு-

**அரசு தரப்பு சாட்சிகள்**

1. அ.சா.1 - ராமதுரை (பிறழ்சாட்சி)
2. அ.சா.2 - கிருஷ்ணன் (பிறழ்சாட்சி)
3. அ.சா.3 - அல்லிமுத்து (காவல் உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

1. அ.த.சா.1 - 10.02.16 தேதியிட்ட புகார்தாரர் ராமதுரையின் கையொப்பம்
2. அ.த.சா.2 - 10.02.16 தேதியிட்ட புகார் வாக்குமூலம்
3. அ.த.சா.3 - 10.02.16 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை
4. அ.த.சா.4 - 10.02.16 தேதியிட்ட பார்வை மகஜர்
5. அ.த.சா.5 - 10.02.16 தேதியிட்ட மாதிரி வரைபடம்

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள் - இல்லை**

**எதிர்தரப்பு சாட்சிகள் - இல்லை**

**எதிர்தரப்பு சான்றாவணங்கள் - இல்லை**

நீதித்துறை குற்றவியல் நடுவர்,
அரூர்.

**குறிப்பு:**

1. எந்த ஒரு சாட்சியையும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்துள்ளார்கள்.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
4. சான்றுப்பொருள் எதுவும் கைப்பற்றப்படாததால் அது குறித்த உத்தரவு இல்லை.

WEB COPY